149—

சமுதாயக் கூடம்

***8940—திரு. எஸ். ரகுபதி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, பெருங்குடி ஊராட்சி, பாலம்பட்டி மற்றும் தெற்கு நல்லிப்பட்டியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பெருங்குடி ஊராட்சி, பாலம்பட்டி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தெற்கு நல்லிப்பட்டியில் சமுதாயக் கூடம் அமைப்பது குறித்த மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருங்குடி ஊராட்சி, குணசந்தை ஊராட்சி, ஓணான்குடி ஊராட்சி போன்ற ஊராட்சிகளிலே ஏற்கெனவே நாற்பதுக்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருக்கின்றன; பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கு வசிக்கின்றார்கள். அங்கே பெருங்குடியிலே மட்டும் ஒரே ஒரு சமுதாயக் கூடம்தான் இருக்கிறது. இன்றைய காலக்கட்டத்திலே, திருமண நிச்சயதார்த்தம், திருமண நிகழ்ச்சிகள், வரவேற்பு நிகழ்ச்சிகள், பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள், பூப்புனித

நீராட்டு விழா நிகழ்ச்சிகள், காதணி விழா நிகழ்ச்சிகள் என்று எல்லா நிகழ்ச்சிகளும் சமுதாயக் கூடங்களிலே நடக்கின்ற காரணத்தினால், சமுதாயக் கூடங்களின் தேவை அதிகரித்திருக்கிறது. எனவே, தேவையைக் கருத்திற்கொண்டு, தெற்கு நல்லிப்பட்டி, பாலம்பட்டி ஆகிய இடங்களில் சமுதாயக் கூடம் அமைத்துத்தர வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். தெற்கு நல்லிப்பட்டியில் சமுதாயக் கூடம் அமைப்பது குறித்து பரிசீலிக்கிறோம் என்று தெரிவித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், ஓணான்குடி ஊராட்சியிலும், குணசந்தை ஊராட்சியிலும் சமுதாயக் கூடங்கள் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிகளிலே அவை தேவைப்படுகின்றன. எனவே, மக்களுடைய நலன் கருதி, மக்களுடைய எண்ணிக்கைக்கேற்ப சமுதாயக் கூடங்களை அங்கு அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன். கடந்த ஆண்டு வீசிய கஜா புயலில் ஆயங்குடி ஊராட்சி, முருக்கப்பட்டி கிராமத்திலே இருந்த ஆதி திராவிடர் சமுதாயத்தினருக்கான சமுதாயக் கூடம் முற்றிலுமாக இடிந்து விழுந்து, சேதமடைந்து, தரைமட்டமாகிவிட்டது. அதை எந்தவகையிலும் பயன்படுத்த முடியாது. அதை வருவாய்த் துறை அதிகாரிகளும், உள்ளாட்சித் துறை அதிகாரிகளும் வந்து, பார்வையிட்டு, குறித்துக் கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆனால், இதுவரை புதிய சமுதாயக் கூடத்தை அங்கு கட்டுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. எனவே, ஓணான்குடி, குணசந்தை ஊராட்சிகளில் புதிய சமுதாயக் கூடங்களும், அதேபோல, கஜா புயலால் பாதிக்கப்பட்ட ஆயங்குடி ஊராட்சி, முருக்கப்பட்டி கிராமத்தில் புதிய ஆதி திராவிடர் சமுதாயக் கூடமும் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பெருங்குடி ஊராட்சியில் 2607 சதுரடி பரப்பளவில் சுமார் 450 பேர் அமரக்கூடிய வகையில் சமுதாயக் கூடம் ஒன்று பயன்பாட்டில் உள்ளது. எனவே, பெருங்குடி ஊராட்சியில் 1.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பாலம்பட்டி கிராமத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

[2020 மார்ச் 21

முற்பகல் 10–20

அதேபோல், திருமயம் தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முன்சந்தை ஊராட்சியில் சமுதாயக் கூடம் ஏதும் இதுவரை கட்டப்படவில்லை. எனவே, முன்சந்தை ஊராட்சியில் உள்ள தெற்கு நல்லிப்பட்டி கிராமத்தில் போதிய இடவசதி உள்ள காரணத்தினால், சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், கஜா புயலால் பாதிக்கப்பட்ட ஆயங்குடி ஊராட்சியில் உள்ள முருக்கப்பட்டி கிராமத்தில் இருக்கக்கூடிய சமுதாயக் கூடம் பழுதடைந்துள்ளது என்றும் கூறியுள்ளார்கள். துறை அதிகாரிகளால் கண்டிப்பாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கும் தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரியாப்பட்டி ஊராட்சி, காடத்து நாச்சியம்மன் கோயிலுக்குப் பக்கத்திலிருக்கக்கூடிய விவசாய நிலங்களுக்கு காடத்து நாச்சியம்மன் கண்மாய் வழியாகத்தான் செல்ல வேண்டும்; அதற்கு போக்குவரத்து வசதி கிடையாது. அங்கு ஒரு பாலம் அமைத்துக்கொடுத்தால்தான் எளிதில் செல்ல முடியும். அது அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. உள்ளாட்சித் துறையின்மூலம் பாலம் அமைக்கப்பட வேண்டும். ஏனென்றால், யூனியன் tank–தான் அந்தக் கண்மாய். அதனைக் கட்டுவதற்கு கடந்த ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 15 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்ட நிலையில், அதற்கு 70 இலட்சம் ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு தந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்றவண்ணம், அந்தப் பாலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும். காடத்து நாச்சியம்மன் கோயிலுக்குப் பக்கத்திலிருக்கக்கூடிய விவசாய நிலங்களுக்கு, விவசாய காலங்களில் கண்மாயைக் கடந்துதான் செல்ல வேண்டியுள்ளது. மக்கள் அங்கு நீச்சலடித்து செல்வது கஷ்டம்; இந்த நிலையில், அந்த நிலங்களுக்கு 5 அல்லது 6 கி.மீ. சுற்றிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இன்றைக்கு உள்ளாட்சித் துறையின்மூலம்

பல்வேறு திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன. அவற்றில், ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ், காடத்து நாச்சியம்மன் கண்மாயில் ஒரு புதிய பாலம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் மக்கள் நீச்சல் அடித்துச் செல்லவேண்டியதில்லை. அங்கு பாலம் கட்ட 70 இலட்சம் ரூபாய் மதிப்பீடு என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கோயிலுக்கும் கண்மாய் வழியாக நிலங்களுக்குச் செல்லக்கூடிய விவசாயிகளுக்கும் பயன்படும் வகையில் பாலம் கட்ட கண்டிப்பாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில், அதிக அளவிலான பாலங்கள் நெடுஞ்சாலைத் துறை மூலமாகவும், ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை மூலமாகவும் கட்டப்பட்டிருக்கின்றன. பெரிய பெரிய பாலங்கள்கூட இன்றைக்கு உள்ளாட்சித் துறையின்மூலம் கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை தொடர்பாக நிச்சயமாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

150—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***52682—திரு. ப. கந்தசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—